சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :05.02.2025
வா.சா.1 – நித்யா W/o முருகேசன்
O.S No.141/2023 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

எனக்கு 2014ல் திருமணம் ஆனது. எனது திருமணத்தை என் அம்மா, மற்றும் என்னுடைய சகோதரர் இணைந்து நடத்திவைத்தார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்து இருககும் இடத்தில் என் சகோதரர் பாலமுருகன் வெல்ட்ரிங் பட்டறை வைத்துள்ளார் என்றால் சரிதான். சுமார் 2 -3 ஆண்டுகளாக மேற்படி பட்டறை வைத்துள்ளார். என் சகோதரர் பாலமுருகன் சிறுவயது முதலே வழக்கு சொத்து இருக்கும் இடத்தில் வெல்ட்ரிங் பட்டறை வைத்துள்ளார் என்றால் சரியல்ல. சிறுவயது முதலே வழக்கு சொத்து இருககும் இடத்தில் வெல்ட்ரிங் பட்டறை வைத்துள்ளார் என்றும் அதை நான் வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 2-3 ஆண்டுகள் மட்டுமே என் சகோதரர் வழக்கு சொத்தில் வெல்டிங்க பட்டறை வைத்துள்ளார் என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்திருக்கிறோமா என்றால் இல்லை. தாவா சொத்து இருக்கும் இடத்தில் உள்ள கடையை தவிர வெளிவேலைகளையும் என் சகோதரர் அவ்வப்போது செய்து வருகிறார் என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் என் சகோதரர் கடை கட்டியிருக்கிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் வீடு நீண்டகாலமாக இருக்கிறது அதில் கடை 2-3 ஆண்டுகளாக இருக்கிறது. என் திருமணத்திற்கு முன்பே வழக்கு சொத்தில் வீடு இருந்தது. வழக்கு சொத்திற்குரிய வீட்டுவரி, சொத்து வரி என் சகோதரர் பாலமுருகன் தான் செலுத்திவருகிறார் என்றால் அதுபற்றி தெரியாது. என் தாயார் தற்போது பிரதிவாதியான என் சகோதரர் பாலமுருகனின் பாதுகாப்பில் இருக்கிறார் அதற்கு முன்பாக நான் தான் அவரை பராமரித்து வந்தேன்,

பிரச்சினைக்கு பின்னர் என் சகோதரர் அவரை பராமரித்து வருகிறார். நான் என் சகோதரரிடம் எனக்குரிய பாகத்தை கொடுக்கும்படி கேட்டேன் ஆனால் என் சகோதரர் பாலமுருகனோ எதுவும் பதில் சொல்லாமல் இருந்துவிட்டார். அதுதான் பிரச்சினை.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.02.05 19:07:42 +0530

Sub Judge

Melur